

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் நாகல் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர்பாலா சேட்டுஏற்பாடு செய்திருந்த 45குடும்பங்களுக்கு ஆடு வழங்குதல் நிகழ்ச்சி ஒன்றிய கழக செயலாளர் கே.சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நீர்வளத் துறை அமைச்சர், கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு 45குடும்பத்திற்கு ஆடுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த், புரவலர்துரை சிங்காரம், ஒன்றிய கழக செயலாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊரக உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.



சென்னை லயோலா கல்லூரியும் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சிலும் இணைந்து பெண்களின் திருமணம், குடும்பம் மற்றும் வேலை சந்தை பங்கேற்பு குறித்த தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்தார் போர்டு மோட்டார் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் (ஆபரேஷன் அக்கவுண்டிங்) தனுஜா பாலாஜி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். மாநாட்டில் லயோலா கல்லூரியின் அதிகாரிகள், செயலாளர் மற்றும் நிர்வாகி அருள் தந்தை பி.ஜெயராஜ் எஸ்ஜே மற்றும் முதல்வர் அருள் தந்தை ஏ.லூயிஸ் அரோகியராஜ் எஸ்ஜே ஆகியோர் பங்கேற்றனர்.

# பேராயர் எஸ்றா சற்குணம் உடல் நலக்குறைவால் காலமானார்!

சென்னை: செப். 24-

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், இவாஞ்சலிகல் சர்ச் ஆஃப் இந்தியா (ECI) பேராயருமான எஸ்றா சற்குணம் உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 86.

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், இவாஞ்சலிகல் சர்ச் ஆஃப் இந்தியா (ECI) பேராயருமான எஸ்றா சற்குணம் அவர்கள், கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், இ.சி.ஐ திருச்சபை பேராயர் எஸ்றா சற்குணம் நேற்று முன்தினம் உடல் நலக் குறைவால் சென்னையில் காலமானார்.

பேராயர் எஸ்றா சற்குணம் தனது 86 வது பிறந்த நாளை, கடந்த ஜூலை மாதம் 19 ஆம் தேதி கொண்டாடினார். அப்போது தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 86 வயதில் நேற்று முன்தினம் மறைந்தார் எஸ்றா சற்குணம்.

மறைந்த பேராயர் எஸ்றா சற்குணத்தின் உடல் சென்னை கீழ்ப்பாக்கம் இறையியல் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது இறுதிச் சடங்கானது நேற்று நடைபெற்றது.

பேராயர் எஸ்றா சற்குணம், மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., ஆகிய தலைவர்களுக்கு மிக நெருக்கமானவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்,இராமச்சந்திரன் சிறப்புரை!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிக்கை!

தென்காசி, செப். 24 -



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26.09.2024 - வியாழக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மகாலில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க 2026 சட்டமன்ற தேர்தலை மிகச் சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காகவும்,கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளான 200 தொகுதிகளில் வெற்றி பெறுவது குறித்தும் அதனை கருத்தில் கொண்டும் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26 .09.2024 அன்று காலை 10 ணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மகாலில் வைத்து மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் இந்நாள்,முன்னாள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,ஊரக, உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

## வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று (24.09.2024) காலை அணைக்கட்டு ஒன்றியத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

| இடம் மற்றும் ஊராட்சி | நேரம் |
|---|---|
| புத்தூர் ஊராட்சி | காலை 8.00 மணி |
| பொய்கை ஊராட்சி | காலை 8.15 மணி |
| சத்தியமங்கலம் ஊராட்சி | காலை 9.00 மணி |
| இலவம்பாடி ஊராட்சி | காலை 9.15 மணி |
| மருதவல்லிபாளையம் ஊராட்சி | காலை 9.30 மணி |
| வல்லண்டராமம் ஊராட்சி | காலை 10.00 மணி |
| வசந்தநடை ஊராட்சி | காலை 10.15 மணி |
| செதுவாலை ஊராட்சி | காலை 10.30 மணி |
| விரிஞ்சிபுரம் ஊராட்சி | காலை 10.45 மணி |
| இறைவன்காடு ஊராட்சி | காலை 11.00 மணி |
| கழனிப்பாக்கம் ஊராட்சி | காலை 11.25 மணி |
| கந்தனேரி ஊராட்சி | காலை 11.30 மணி |
| ஊனை ஊராட்சி | காலை 11.45 மணி |
| கெங்கநெல்லூர் ஊராட்சி | பகல் 12.00 மணி |
| அணைக்கட்டு ஊராட்சி | பகல் 12.15 மணி |
| அப்புக்கல் ஊராட்சி | பகல் 12.30 மணி |
| ஊனை வாணியம்பாடி ஊராட்சி | பகல் 12.45 மணி |
| ஓதியத்தூர் ஊராட்சி | பகல் 1.00 மணி |
| கரடிகுடி ஊராட்சி | பகல் 1.15 மணி |
| தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி | பகல் 1.30 மணி |
| பிராமணமங்கலம் ஊராட்சி | மாலை 3.00 மணி |
| கீழ் கிருஷ்ணாபுரம் ஊராட்சி | மாலை 3.15 மணி |
| திப்பசமுத்திரம் ஊராட்சி | மாலை 3.30 மணி |
| கருங்காலி ஊராட்சி | மாலை 3.45 மணி |
| மகதுபுரம் ஊராட்சி | மாலை 4.00 மணி |
| ஓங்கப்பாடி ஊராட்சி | மாலை 4.30 மணி |
| வரதலம்பட்டு ஊராட்சி | மாலை 4.45 மணி |
| கீழ்கொத்தூர் ஊராட்சி | மாலை 5.00 மணி |
| பின்னத்துறை ஊராட்சி | மாலை 5.30 மணி |
| சேர்பாடி ஊராட்சி | மாலை 6.00 மணி |
| நேமந்தபுரம் ஊராட்சி | மாலை 6.30 மணி |
| அத்திகுப்பம் ஊராட்சி | மாலை 6.45 மணி |
| மடையப்பட்டு ஊராட்சி | இரவு 7.00 மணி |
| வன்னந்தாங்கல் ஊராட்சி | இரவு 7.15 மணி |
| மேல்அரசம்பட்டு | இரவு 7.45 மணி |

# நெல்லை மண்டல பகுதியில் சுகாதாரப் பணிகள்!

## மேயர் கோ.ராமகிருஷ்ணன் நேரில் ஆய்வு!

நெல்லை, செப். 24 -

நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் மாநகராட்சிக்கு உட்பட்ட நெல்லை மண்டல பகுதிகளில் சுகாதாரப்பணிகளை 18 தெருக்களுக்கு சைக்கிளில் சென்று நேரில் பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மக்கள் பணியே மகேசன் பணி என்ற பொன்மொழிக்கு ஏற்ப நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் மக்களின் அடிப்படைத் தேவைகளை கருத்தில் கொண்டும், தூய்மை பணிகளில் அதிக முக்கியத்துவம் எடுத்துக் கொண்டும்,நெல்லை மண்டல பகுதியில் உள்ள 25 வது வார்டுக்கு உட்பட்ட தமிழ்சங்கத் தெரு, அண்ணா தெரு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மார்க்கெட்,4 ரதவீதி,சுடலைமாடன் கோவில் தெரு,அப்பர் தெரு, சத்தியமூர்த்தி தெரு,தெப்பக்குளம் தெரு, வளம்புரிஅம்மன் தெரு,சுந்தர தோழர்தெரு,தண்டியல் சாவடி தெரு, பருவசிங்க ராஜா தெரு,தெற்குத் தெரு, நயினார் குளம், பள்ளிவாசல் தெரு, நயினார்குளம் ரோடு,சுவாமி சன்னதி, டவுண் காவல் நிலையம் ஆகிய 18 தெருக்களுக்கு சைக்கிளில் சென்று கழிவுநீர் ஓடைகள் சுத்தப்ப டுத்தும் பணிகளையும்,துப்புரவு பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து அப்பகுதியில் பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து, குறைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். நிகழ்வில் சுகாதார ஆய்வாளர் சிவக்குமார், தகவல் தொழில்நுட் பணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசி மணி,சேக் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மேயர் கோ.ராமகிருஷ்ணன் சைக்கிளில் சென்று வார்டு பணிகளை ஆய்வு செய்வதை குறிக்கோளாக கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு

# மாநகர, ஒன்றிய, நகர,பகுதி, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநகர,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டும்

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5.விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6.விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ஆகவே மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற்கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

# செஞ்சுரி செல்வம் தாயார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி.

தேனி , செப். 24 -



தேனி மாவட்டம் முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், இப்கோ சிறப்பு பிரதிநிதியுமான செஞ்சுரியின் மனைவியும், தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் தாயாருமான பாப்பா அவர்கள் மறைவையொட்டி, ஆண்டிபட்டி அருகே உள்ள அணைக்கரைப்பட்டி அவரது கிராம இல்லத்தில் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி, மகாராஜன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில செயல் திட்ட குழு உறுப்பினர் மூக்கையா, உள்பட கழக ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட மூத்த கழக முன்னோடிகள் அனைவரும் வந்திருந்து அஞ்சலி செலுத்தினர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் குத்துக்கல்வலசை எஸ்.ஆர்.ஆர். திருமண மகாலில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் செல்லப்பா, தமிழ்ச்செல்வன், கென்னடி, கனிமொழி, ஷெரிப், செல்லத்துரை, சேசுராஜன், சேக் தாவுது, முத்துப்பாண்டி, ஆறுமுகசாமி, ரகீம், சமுத்திரபாண்டியன், ரவிச்சந்திரன், ராஜேந்திரன், அருள், சாமிதுரை, தமிழ்ச்செல்வி உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



பழனி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொடைக்கானல் கீழ் மலை ஒன்றியம் மேல் பள்ளத்தில் மக்களின் நீண்டகால கோரிக்கையான புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிகளை திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன் உட்பட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.